www.Padasalai.Net www.TrbTnpsc.com

# முதல் திருப்புதல் தேர்வு - 2025

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

☆

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

பகுதி-I

14 x 1 = 14

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. பாயிரம் இல்லது ________ அன்றே
   அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. மண்ணுக்கு வளம் சேர்ப்பன
   அ) ஊடுபயிர் ஆ) இயற்கை உரங்கள்
   இ) மண்புழு ஈ) இவை மூன்றும்
3. மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
   அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்
   இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) ரெக்கை, அங்ஙனம்
4. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
   அ) பகுதி, விகுதி ஆ) பகுதி, விகுதி, விகாரம்
   இ) பகுதி, விகுதி, சந்தி ஈ) பகுதி, விகுதி, இடைநிலை
5. தொல்காப்பியத்தில் உள்ள இயல்களின் எண்ணிக்கை
   அ) 27 ஆ) 9 இ) 13 ஈ) 3
6. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று
   அ) சிறுதேர் ஆ) சாழல் இ) சிறுபறை ஈ) சிற்றில்
7. 'அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்' - யார் யாரிடம் கூறியது?
   அ) அமைச்சர், மன்னரிடம் ஆ) அமைச்சர், கவிஞரிடம்
   இ) மன்னர், அமுதவல்லியிடம் ஈ) மன்னர், அமைச்சரிடம்
8. மாநகர் - இலக்கணக்குறிப்பு தருக.
   அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம் இ) பண்புத்தொகை ஈ) உரிச்சொல் தொடர்
9. JOURNALIST என்பதன் தமிழ்ச்சொல்
   அ) இதழாளர் ஆ) கவிஞர் இ) மொழிபெயர்ப்பாளர் ஈ) ஆய்வாளர்
10. **கீழுள்ளவற்றை பொருத்தி விடை தேர்க.**

| | | |
|---|---|---|
| அ) விரியன் | - | 1. தண்டை |
| ஆ) திருகுமுருகு | - | 2. காலாழி |
| இ) நாங்கூழ்ப் புழு | - | 3. சிலம்பு |
| ஈ) குண்டலப்பூச்சி | - | 4. பாடகம் |

11. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
    அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாள் ஈ) ஆசிரியர்

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



12. தமிழின் முதல் பா வடிவ நாடக நூல் ________.
அ) இரகசிய வழி ஆ) மனோன்மணீயம்
இ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு ஈ) நூல்தொகை விளக்கம்

13. 'பால்நிலாப் பாதை' என்ற நூலை எழுதியவர்
அ) ஏ.ஆர்.ரகுமான் ஆ) இளையராஜா
இ) கங்கை அமரன் ஈ) பாரதிராஜா

14. சாந்தி நிகேதனில் உள்ள மரம்
அ) சமேலி ஆ) ஜுதி இ) பியால ஈ) சேவுந்தி

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 3 x 2 = 6

15. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?
16. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?
17. இங்கே ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள் -
எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?
18. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2 x 2 = 4

19. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.
20. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?
21. நாட்டுப்புறங்களிலும், பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாக தாகூர் எவற்றைக் கூறுகிறார்.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடை தருக.** 7 x 2 = 14

22. உயிரீறு, மெய்யீறு பற்றி எடுத்துக்காட்டுடன் எழுதவும்.
23. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.*
அ) அலர்ந்து ஆ) அழைத்தான்
24. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.*
அ) இழுக்கின்றி ஆ) பயமில்லை
25. *மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.*
அ) முதலைக்கண்ணீர் ஆ) தாளம் போடுதல்
26. *மயங்கொலிச் சொற்களின் பொருள் அறிந்து ஒரே தொடரில் அமைத்து எழுதுக.*
உலை, உளை, உழை
27. *தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.*
அனைத்து துறைகளிலும் ஆண்களை போலவே பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



28. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.*

அ) காலநடை ஆ) வைகை

29. *பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.*

அ) விசா ஆ) பாஸ்போர்ட்

30. *தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.*

ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. சு.வில்வரத்தினம் "பாடத்தான் வேண்டும்" என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
33. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றி திருக்குறள் கூறுவன யாவை?
34. "சேரநாடு செல்வ வளம் மிக்கது" என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2 x 4 = 8

35. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.
36. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதை பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.
37. ஃப்ரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோயில்கள் குறித்து நீவீர் அறிவன யாவை?
38. ஜீவாவின் பேச்சு நடை குறித்து சுந்தரராமசாமி கூறுவன யாவை?

### பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. 3 x 4 = 12

39. உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

*(அல்லது)*

தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு

*- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.*

40. *இலக்கிய நயம் பாராட்டுக.*

மீன்கள் கோடி கோடி சூழ வெண்ணிலாவே - ஒரு
வெள்ளி ஓடம் போல வரும் வெண்ணிலாவே !
வளர்ந்து வளர்ந்து வந்த வெண்ணிலாவே ! - மீண்டும்
வாடி வாடிப் போவதேனோ? வெண்ணிலாவே !
கூகை ஆந்தை போல நீயும் வெண்ணிலாவே ! - பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே !
பந்தடிப்போம் உன்னை என்று வெண்ணிலாவே ! - நீயும்
பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே !

*-கவிமணி*

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



41. *பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.*

அ) யானைக்கும் அடி சறுக்கும்

*(அல்லது)*

ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

42. 'வா' என்ற வேர்ச்சொல்லை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரில் அமைத்து எழுதுக.

43. *தமிழாக்கம் தருக.*

1. Culture does not make people. People make culture.
2. You must be the change you wish to see in the world.
3. Education is the most powerful weapon which you can use to change the world.
4. Looking at beauty in the world is the first step of purifying the mind.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 3 x 6 = 18

44. அ) கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.

*(அல்லது)*

ஆ) "மதீனா நகரம் ஒரு வளமான நகரம்" என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

45. அ) "சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே" என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.

*(அல்லது)*

ஆ) 'கல்லும் கதை சொல்லும்' - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46. அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீவீர் அறிவன யாவை?

*(அல்லது)*

ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல் வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

## பகுதி - V

**அடிபிறழாமல் எழுதுக :** 4 + 2 = 6

47. அ) ஆக்கியோன் பெயரே ..... எனத் தொடங்கும் நன்னூல் - பாயிரப் பாடல்

ஆ) செயல் - என முடியும் குறள்

*******

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com